விருதுநகர் மாவட்டம்

மூன்றாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2025

வகுப்பு 8

தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 7×1=7

1) அயோத்திதாசர் நடத்திய இதழ் .............

அ) ஒருபைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்

இ) அரைப்பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

2) 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

அ) இன்பம்+துன்பு ஆ) இன்பம்+துன்பம் இ) இன்ப+அன்பம் ஈ) இன்ப+அன்பு

3) நம்பர்க்கு+அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............

அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு

4) கவலைகள் ............. அல்ல.

அ) சுமைகள் ஆ) சுவைகள் இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

5) அசை ............. வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

6) அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ............. விருது வழங்கியது.

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசன் ஈ) பத்மபூசன்

7) வறுமை வந்த காலத்தில் ............. குறையாமல் வாழ வேண்டும்.

அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

**ஆ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 5×2=10

**(10-ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

8) நண்பர்களின் இயல்பை அளந்து காட்டும் அளவுகோல் எது?

9) தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.

10) 'நவில்தோறும் ..........' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

11) தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

12) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?

13) அ) **இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக:**

முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.

ஆ) **பொருத்தமான சொற்களால் நிரப்புக:**

இவை ............ (தான் / தாம்) எனக்குப் பிறந்த நூல்கள்.

14) மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?

**இ) அடிபிறழாமல் எழுதுக:** 1×5=5

15) 'ஒன்றே குலமும் ...........' எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை எழுதுக.

**ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 3×4=12

16) பூமி எப்போது பாதையாகும்?

17) ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?

18) இருவகை அசைகளையும் விளக்குக.

19) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **2×5=10**

20) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

21) ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாவை?

22) பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

**ஊ) ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி:** **1×6=6**

23) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

24) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

----------

www.Padasalai.Net

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com